# வித்யாலட்சுமி மேல்நிலைப்பள்ளி (சி.பி.எஸ்.இ)

சென்னங்குப்பம்

| Date : 23.01.2020 | மாதிரி வினாத்தாள் (2019-2020) | Marks : 80 |
|---|---|---|
| Time : 3Hrs. | தமிழ் | Grade : X |

- **குறிப்புகள் : இக் கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.**
- ***This Question Paper is divided into four section :***

| | | | | |
|---|---|---|---|---|
| ❖ பிரிவு - அ | : | படித்தல் (உரைநடைப்பகுதி) | : | 15 மதிப்பெண்கள் |
| ❖ *Section - A* | *:* | *Reading comphrehension* | *:* | *15 Marks* |
| ❖ பிரிவு - ஆ | : | எழுதுதல் | : | 14 மதிப்பெண்கள் |
| ❖ *Section – B* | *:* | *Writing* | *:* | *14 Marks* |
| ❖ பிரிவு - இ | : | இலக்கணம் | : | 15 மதிப்பெண்கள் |
| ❖ *Section – C* | *:* | *Grammar* | *:* | *15 Marks* |
| ❖ பிரிவு - ஈ | : | இலக்கியம் / தமிழ்ப் பாடநூல்கள் | : | 36 மதிப்பெண்கள் |
| ❖ *Section – D* | *:* | *Literature / Text Books* | *:* | *36 Marks* |

## பகுதி - அ

**1. கீழ்வரும் பத்தியைப் படித்து பொருள் உணர்ந்து தொடர்ந்து வரும் பல்விடை வினாக்களுக்கு ஏற்ற விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **(5x1=5)**

உலகம் நிலம், நீர், காற்று, தீ, வானம் ஆகிய ஐம்பூதங்களின் கூட்டுச் சேர்க்கையால் ஆனது. அவற்றின் இயக்கங்களால் உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அவற்றுள்ளும் நீரின்றி எந்த உயிரும் இயங்க இயலாது. அதனால் தான் வள்ளுவர் 'நீரின்றி அமையாது உலகு' என்று கூறிப் போந்தார். அந்நீரைத் தருகின்ற மழையின் சிறப்பை உணர்ந்து திருக்குறளில் வான் சிறப்பு என்ற அதிகாரமும் படைத்து புகழ்ந்து உரைக்கின்றார் அப்பெருமகனார். மேலும் வானம் தன் பயனாகிய மழையைத் தராவிடில் இவ்வுலகில் தானம், தவம் ஆகிய இருபெரும் செயல்களும் நடைபெறாதென்றும் மழைப் பயன் குன்றுமாயின், தெய்வ வழிபாடுகளும் குன்றும் என்றும் அவர் கூறுகிறார். சிலப்பதிகாரம் தந்த இளங்கோவடிகள் 'மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்' என்று மழையைப் போற்றி வணங்கியே தம் காப்பியத்தைத் தொடங்குகின்றார்.

**வினாக்கள் :**

1. உலகம் எதன் கூட்டுச் சேர்க்கையால் ஆனது?

   அ) அண்டம் ஆ) மண் இ) ஐம்பூதங்கள் ஈ) காற்று - பூதம்

2. நீரின்றி அமையாது உலகு என்று கூறியவர் யார்?

   அ) கம்பர் ஆ) இளங்கோவடிகள் இ) வள்ளுவர் ஈ) வள்ளலார்

3. மழையின் சிறப்பை உணர்த்தும் அதிகாரத்தின் பெயர் என்ன?

   அ) வான் சிறப்பு ஆ) மண் சிறப்பு இ) விண் சிறப்பு ஈ) அவை சிறப்பு

4. இளங்கோவடிகள் எழுதிய காப்பியத்தின் பெயர் என்ன?

   அ) மணிமேகலை ஆ) சிலப்பதிகாரம் இ) குண்டலகேசி ஈ) வளையாபதி

5. மழைபெய்யா விடில் இவ்வுலகில் நடைபெறா இரு செயல்கள் ...............

   அ) அன்பு, அருள் ஆ) தானம், தவம் இ) அடக்கம், பொறுமை ஈ) ஈகை, கொடை

**2. பின்வரும் பத்தியைப் படித்து கொடுக்கப்பட்ட வினாவிற்கு விடை தருக.** **(5x1=5)**

நல்லவராக இருந்தால் மட்டும் போதாது வல்லவராகவும் இருக்க வேண்டும் அல்லவா? இந்த உலகியல் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமானால் நல்லவராகவும் இருக்க வேண்டும் அத்துடன் வல்லவராகவும் இருக்க வேண்டும். ஒரு குடும்பத்தை எடுத்துக்காட்டாகக் கொண்டு பார்க்கலாமே.

நல்ல மருமகளாக வாழத் தொடங்கும் ஒரு பெண்ணுக்கு வல்லமை இல்லாவிட்டால் மற்றவர்கள் செய்யும் கொடுமைகளைக் கொண்டு தவிக்க வேண்டி வருமே ! போட்டி, பொறாமை, கொடுமை ஆகியவற்றுக்கு எதிர்த்து நின்று தாக்குப்பிடித்து வாழ்க்கையில் வெற்றிபெற வல்லமை வேண்டும். மருமகளிடத்தில் வல்லமை என்பது கொடுமை செய்வதற்காக அன்று, கொடுமைகளை எதிர்த்து நிற்பதற்காக என்ற நிலையில் வல்லமையும் வரவேற்கத் தக்க உலகியல் பண்பாக அமைகின்றது. எனவே நல்ல தன்மையோடு வல்லமையும் சேரப் பெற்று வாழ வேண்டும்.

**வினாக்கள் :**

1. ஒருவர் எப்படி இருத்தல் வேண்டும்?

   அ) நல்லவராக ஆ) வல்லவராக இ) குணமானவராக ஈ) நாணயமுள்ளவராக

2. வாழ்க்கையில் வெற்றி பெற எப்படி இருக்க வேண்டும்?

   அ) வல்லவராக ஆ) நல்லவராக இ) கெட்டவராக ஈ) நாணயமானவராக

3. மருமகளிடத்தில் எதற்கு வல்லமை வேண்டும்?

   அ) கொடுமையை எதிர்க்க ஆ) நல்ல மருமகளாக

   இ) வாழ்க்கை வாழ ஈ) எதிர்த்துப் போராட

4. என்ன சேரப் பெற்று நாம் வாழ வேண்டும்?

   அ) நல்ல தன்மையோடு வல்லமை ஆ) வல்லமையோடு நல்ல தன்மை

   இ) கெட்ட தன்மையோடு வல்லமை ஈ) கெட்ட தன்மையோடு கொடுமை

5. வல்லமை என்பது என்ன பண்பாக அமைகின்றது?

   அ) உலகியல் பண்பாக ஆ) வாழ்வியல் பண்பாக

   இ) மரவியல் பண்பாக ஈ) நடப்பியல் பண்பாக

**3. பின்வரும் பத்தியைப் படித்து அதனை மூன்றில் ஒரு பங்காக சுருக்கி வரைக.** **(5)**

இராமலிங்கர் அருளிய பாடல்கள் அருட்கருணை நிறைந்தவை. ஆறு தொகுதிகள் கொண்ட இவரது பாடல்களைத் திருவருட்பா என மக்கள் போற்றுகின்றனர். இவர் உருவ வழிபாட்டை நீக்கி ஒளி வழிப்பாட்டை மக்கள் பின்பற்றச் செய்தார். அதற்காகவே வடலூரில் சத்திய ஞானசபையை நிறுவினார். மேலும் மக்களிடம் அறியாமை நீங்கி அறிவு ஒளிபெற, அங்கே சோதி தரிசனப் புதுமையைப் புகுத்தினார். இதனால் தான் பாரதியார் இவரைப் 'புதுநெறி கண்ட புலவர்' என்று போற்றினார்.

வள்ளலார் மொழிப்பற்று மிக்கவர், தமிழ் மொழியே இறவாதநிலை தரும் என்று கருதினார். பயில்வதற்கும் அறிதற்கும் மிகவும் எளிதாய், பாடுதற்கும் வணங்குதற்கும் மிகவும் இனிமை உடையதாய், சாகாக்கல்வியை மிகவும் எளிமையாக அறிவிப்பதாய்த் திருவருள் வலத்தால் கிடைத்த தென்மொழி ஒன்றிடத்தே மனம் விரும்பச் செய்து அத்தென்மொழியால் பல்வகை வழிபாட்டுப் பாடல்களைப் பாடி அருளினீர் என்று உண்மை உரைத்தார். உலகெலாம் உய்ய உயரிய நெறிகண்ட இறவா நிலை அடைந்தார். அந்த அருளாளர் காட்டிய நெறிகளைப் பின்பற்றினால் சாதி, மத, இன வேறுபாடுகள் நீங்கும்.

## பகுதி - ஆ

**4.** அ) உன் குடியிருப்புப் பகுதியில் நூலகம் அமைத்துத் தருமாறு நூலக ஆணையருக்குக் கடிதம் எழுதுக. **(6)**

(அல்லது)

ஆ) மாநில அளவில் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக. *(இரண்டு கடிதங்களிலும் உன் முகவரி : ம. அறவாணன், 5. பெரிய தெரு, அமைந்தக்கரை, சென்னை - 600 026 எனக் கொள்க)

**5. பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒரு தலைப்பின் கீழ் குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை எழுதுக. (8)**

(அ) முன்னுரை - சேமிப்பின் அவசியம் - சேமிக்கும் முறைகள் - சேமிப்பின் பயன்கள் - சிக்கன வாழ்வு - சீரான வாழ்வு - முடிவுரை.

(ஆ) முன்னுரை - தகவல் தொடர்பு சாதனங்கள் - நாகரீக வளர்ச்சி - தகவல் தொடர்பு சாதனங்களின் அவசியம் - நன்மை, தீமைகள் - முடிவுரை.

(இ) முன்னுரை - நீரின்றி அமையாது உலகு - நீர் ஆதாரங்கள் - மழைநீர் சேகரிப்பு - காரணங்கள் - முடிவுரை.

## பகுதி - இ (இலக்கணம்)

**6. சான்று தருக (ஏதேனும் மூன்று) (3)**

**1.** குறிப்பு வினைமுற்று : அ) படித்தான் ஆ) படி, நட இ) பாம்பு பாம்பு ஈ) அவன் பொன்னன்

2. உயிரளபெடை : அ) அரங்கம் ஆ) குடிதழீஇ இ) விடாஅர் ஈ) அடிதழீஇ

3. நாள் : அ) என் ஆ) படும் இ) நாடு ஈ) உலகு

4. தன்மைப் பெயர் : அ) நீர், நீ ஆ) யாம், யான் இ) பாரி, பாரி ஈ) தாங்கள்

5. கயல் விழி படித்தாள் (பெயரெச்சமாக மாற்றுக) : அ) கயல்விழி படி ஆ) படி கயல் விழி இ) கயல் படி ஈ) படித்த கயல்விழி

**7. நிரப்புக : (ஏதேனும் மூன்று) (3)**

**1.** வினாவிற்கு விடையாக இன்னொரு வினாவைக் கேட்பது ...................... எனப்படும்.
அ) வினா எதிர் வினாதல் விடை ஆ) உற்றது உரைத்தல் விடை
இ) ஏவல் விடை ஈ) குறிப்பு விடை

2. ‘கத்துங் குயிலோசை என்றன் காதில் விழவேண்டும்’ என்பது .....................
அ) வினாவழு ஆ) பால்வழு இ) மரபு வழுவமைதி ஈ) திணை வழு

3. ஒன்றிற்கு மேற்பட்ட வினையெச்சங்கள் சேர்ந்து பெயரைக் கொண்டு முடியும் எச்சம் ..............
அ) பெயரெச்சம் ஆ) வினையெச்சம் இ) முற்றெச்சம் ஈ) கூட்டுநிலைப் பெயரெச்சம்

4. இடைச்சொல்லுடன் பெயரோ, வினையோ தொடர்வது ..................... தொடர்
அ) வேற்றுமைத் தொடர் ஆ) வினைத்தொடர்
இ) இடைச்சொல் தொடர் ஈ) உரிச்சொல் தொடர்

5. எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் அளவுப் பெயர்களைத் தொடர்ந்து வருவது ........
அ) உம்மைத் தொகை ஆ) உவமைத் தொகை இ) பண்புத் தொகை ஈ) வேற்றுமைத் தொகை

**8. கூறியவாறு செய்க : (ஏதேனும் மூன்று)** **(3)**

**1.** மருதம் - இந்நிலத்திற்கான தொழிலை எழுதுக.

அ) மீன் பிடித்தல் ஆ) தேன் எடுத்தல் இ) வழிப்பறி ஈ) நெல்லரிதல், களைப் பறித்தல்

2. நேர் நேர் நேர் - மூவசைச் சீருக்கான வாய்பாட்டை எழுதுக.

அ) தேமாங்காய் ஆ) தேமாங்கனி இ) கருவிளங்கனி ஈ) கூவிளங்கனி

3. திரைக்கை (உவமையாக்குக)

அ) திரைகள் ஆ) கைகள் இ) திரை போன்ற கை ஈ) கைத்திரை

4. நல்வினை, தீவினை - இச்சொல்லின் தொகைச் சொல்லை எழுதுக.

அ) தன்வினை ஆ) பிறவினை இ) இருவினை ஈ) இருதிணை

5. கூறி - இச்சொல்லை வினை முற்றாக மாற்றுக.

அ) கூறியது ஆ) கூறிய இ) கூறினான் ஈ) கூறுதல்

**9. இலக்கணக் குறிப்புத் தருக : (ஏதேனும் மூன்று)** **(3)**

**1.** பூங்கொடி

அ) உம்மைத் தொகை ஆ) அன்மொழித் தொகை

இ) உவமைத் தொகை ஈ) வேற்றுமைத் தொகை

2. கண்ணன் வந்தான்

அ) தனிமொழி ஆ) தொடர்மொழி இ) பொதுமொழி ஈ) சொல்

3. பாடியவர்
அ) வினைச்சொல் ஆ) பெயர்ச்சொல் இ) தொழிற்பெயர் ஈ) வினையாலணையும் பெயர்
4. பருஉக்
அ) செய்யுளிசையளபெடை ஆ) சொல்லிசையளபெடை
இ) ஒற்றளபெடை ஈ) இன்னிசையளபெடை
5. இருபெயரொட்டுப் பண்புத்தொகை ..................
அ) செம்மலர் ஆ) முல்லைமலர் இ) வட்டநிலா ஈ) முத்துப்பல்

**10. சரியான சொற்றொடர் எடுத்தெழுதுக : (ஏதேனும் மூன்று)** **(3)**

**1.** அ) அளபெடை என்னும் சொல்லுக்கு மாத்திரை எடுத்தல் என்பது பொருள்.

ஆ) அளபெடை என்னும் சொல்லுக்கு அசை எடுத்தல் என்பது பொருள்.

இ) அளபெடை என்னும் சொல்லுக்கு விகுதி எடுத்தல் என்பது பொருள்.

ஈ) அளபெடை என்னும் சொல்லுக்கு அணி எடுத்தல் என்பது பொருள்.

2. அ) மெய்யும், ஆய்தமும் எழுத்தில் முதலெழுத்து என்று குறிக்கப்படும்.
ஆ) மெய்யும், ஆய்தமும் எழுத்தில் யாப்பில் ஒற்று என்று குறிக்கப்படும்.
இ) மெய்யும், ஆய்தமும் யாப்பில் சீர் என்று குறிக்கப்படும்.
ஈ) மெய்யும், ஆய்தமும் யாப்பில் பொருள்கோள் என்று குறிக்கப்படும்.

3. அ) பொருள்கோள் பத்து வகைப்படும்.
ஆ) பொருள்கோள் எண் வகைப்படும்.
இ) பொருள்கோள் பன்னிரெண்டு வகைப்படும்.
ஈ) பொருள்கோள் ஆறு வகைப்படும்.

4. அ) வெளிப்படையாக வரும் விடைகள் சுட்டு நேர், மறை.
ஆ) வெளிப்படையாக வரும் விடைகள் உறுவது கூறல்.
இ) வெளிப்படையாக வரும் விடைகள் எதிர்மறை விடை.
ஈ) வெளிப்படையாக வரும் விடைகள் மறைவிடை.

5. அ) இருவர் உரையாடுவது போன்ற ஓசை அகவல் ஓசை.
ஆ)இருவர் உரையாடுவது போன்ற ஓசை செப்பலோசை.
இ) இருவர் உரையாடுவது போன்ற ஓசை நேரசை.
ஈ) இருவர் உரையாடுவது போன்ற ஓசை தூங்கலோசை.

## பகுதி - ஈ

**11. கீழ்கண்ட உரைநடைப் பத்தியைப் படித்து விடையளிக்க : (5)**

"ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு " என்கிறார் மணவை முஸ்தபா. "ஒரு மொழி வளம்பெறவும் உலகத்துடன் உறவுகொள்ளவும் மொழிபெயர்ப்பு இன்றியமையாததாகும். உலக நாகரிக வளர்ச்சிக்கும் பொருளியல் மேம்பாட்டிற்கும் மொழிபெயர்ப்பும் ஒரு காரணமாகும்" என்கிறார் மு.கு. ஜகந்நாத ராஜா. மொழிபெயர்த்தல் என்ற தொடரைத் தொல்காப்பியர் மரபியலில் குறிப்பிட்டுள்ளார். "மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு சங்ககாலத்திலேயே தமிழில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டதைப் புலப்படுத்துகிறது.

**வினாக்கள் :**

1. ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது எவ்வாறு கூறப்படுகிறது?
2. உலக நாகரிக வளர்ச்சிக்கும் பொருளியல் மேம்பாட்டிற்கும் மொழிபெயர்ப்பும் ஒரு காரணமாகும் என்றவர்?
3. மொழி பெயர்தல் என்ற தொடரைத் தொல்காப்பியர் எந்த இயலில் குறிப்பிட்டுள்ளார்?
4. மொழி வளம்பெறவும் உலகத்தோடு தொடர்பு கொள்ளவும் எது அவசியம்?
5. சங்க காலத்தில் தமிழில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டதைப் புலப்படுத்துவது எது?

**12. கீழ்கண்டபாடலைப் படித்து ஏற்ற விடையளிக்க : (4)**

பொற்காலமாக இருந்தாலும்
இவள் தலையில் எழுதியதோ
கற்காலம்தான் எப்போதும்
தொலைந்ததே வாழ்வு என
தலையில் கைவைத்து
புலம்புவார் பூமியிலே
தன் வாழ்வு தொலைக்காமல்

தற்காத்து வைப்பதற்காய்
தலையில் கைவைக்கிறாள் இவள்.
வாழ்வில் தலைக்கனம்
பிடித்தவர் உண்டு.

<u>**வினாக்கள்**</u> :

1. வாழ்வில் தலைக்கனம் பிடித்தவர் உண்டு தலைக்கனமே வாழ்வானவர்கள் ...................
அ) மருத்துவர் ஆ) சித்தாளு இ) பெரியாளு ஈ) வேடுவர்

2. முகம்மது ர.ஃ.பியின் புனைப்பெயர் .............
அ) கண்ணையன் ஆ) சித்தாளு இ) நாகூர்ரூமி ஈ) பாவேந்தர்
3. நாகூர்ரூமி எழுதிய நாவல் ................
அ) பஞ்சம் ஆ) கப்பலுக்குபோன மச்சான்
இ) நாகூர் வணிகம் ஈ) டோக்கியோ இளவரசி
4. தொழிலாளர்களின் மனச்சுமையை அறியாதது ..................
அ) செங்கற்கள் ஆ) பல கைகள் இ) மேஜைகள் ஈ) மரங்கள்

**13. திருக்குறள் :** **(4x ½ = 2)**

1. குற்றம் இலனாய்க் .................... வாழ்வானைச்
சுற்றமாச் .............. உலகு.
2. பண்என்னாம் பாடற்கு இயைபுஇன்றேல் ..................
கண்ணோட்டம் ............... கண்?

**14. கீழ்க்கண்ட செய்யுள் வினாக்களுக்கு விடையளி : (ஏதேனும் இரண்டு)** **(2x 4 = 8)**

1. சரயுநதி இயற்கையின் தோற்றமாக ஊடுருவி எவ்வாறு பாய்கிறது என்பதை எழுதுக.
2. பூத்தொடுக்கும் பெண்ணின் மனநிலையாக கவிஞர் உமா மகேஸ்வரி கூறும் செய்திகளை எழுதுக.
3. எவையெல்லாம் அறியேன் என கருணையன் கூறுகிறான்?
4. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

**15. கீழ்க்கண்ட உரைநடை பகுதிக்கு விடையளி : (ஏதேனும் இரண்டு)** **(2x 5 = 10)**

1. ஹிப்பாலஸ் பருவக் காற்று குறிப்பு வரைக.
2. தாவரத்தின் அடிப்பகுதியை குறிப்பதற்கான சொற்களை விளக்குக.
3. தெருக்கூத்து பற்றியும் அவற்றின் வளர்ச்சி பற்றியும் எழுதுக.
4. திறன்பேசியில் இயங்கும் உதவு மென்பொருள்களின் பணிகள் யாவை?
5. ‘மரம் தரும் வரம் நான்’ எனக் காற்று கூறும் செய்திகளை எழுதுக.

**16. கீழ்க்கண்ட துணைப்பாட வினாவிற்கு விடையளி : (ஏதேனும் ஒன்று)** **(7)**

1. அன்னமய்யா என்னும் பெயருக்கும், அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தத்தை கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விளக்குக.
2. ‘மங்கையராய்ப் பிறப்பதற்கே’ - என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.
3. ‘ஒருவன் இருக்கிறான்’ சிறுகதையின் கதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் மாந்தர்கள் பற்றி எழுதுக.

******